பயந்துக்கொண்டு இந்த உண்ணாவிரதத்தை மேற்கொண்டு இருக்கிறார்கள். இந்த அரசை நாங்கள் நம்பிக்கொண்டு இருக்கிறோம். **அந்த நம்பிக்**கையை வலுப்படுத்தும் வகையில் அரசாங்கம் அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க ஏதேனும் ஒரு திட்டத்தை அறிவித்தால் நன்மையாக இருக்கும். அப்படிப்பட்ட திட்டத்தை அறிவித்தால் நாங்களும் அவர்களுக்கு ஆலோசனை வழங்கி உண்ணாவிரதத்தைக்கைவிட முயற்சி செய்வோம். ஆகவே, அரசு ஏதேனும் ஒரு திட்டத்தை அறிவிக்க முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் நிலை குறித்து அனுதாபத்தோடு இந்த அரசு பரிசீலனை செய்யும் என்ற நிலைமையை ஆசிரிய பெருமக்களுக்கே தெரியும். ஆகவே, ஒத்துழைப்புத் தரவேண்டிய நேரங்களில் போராட்டம் நடத்துவது என்பது அரசாங்கத்தின் நிலைமையை சிரமங்களுக்கு உள்ளாக்கும் என்று அறிவுரை கூறி, போராட்டத்தைக் கைவிடும்படி கேட்டுக்கொள்வது மாண்புமிகு உறுப்பினர்களின் கடமை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) சென்னை மாநகராட்சியில் வீட்டுவரி பலமடங்கு உயர்த்தப்பட்டதால் ஏழை குடிசைப்பகுதி மற்றும் நடுத்தர மக்கள் பீதி அடைந்துள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சென்னை மாநகராட்சியில் வீட்டு வரியை இதுவரை இருந்து வந்ததைவிட பல மடங்கு உயர்த்திய காரணத்தால் ஏழை குடிசைப்பகுதி மற்றும் நடுத்தர மக்கள் ஆகியோர் பெரும் பீதி அடைந்துள்ள நிலை குறித்து, திரு. மு. அரங்கநாதன் அவர்கள் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. மு. அரங்கநாதன்: துணைத் தலைவரவர்களே, விதி 41-ன்கீழ், சென்னை மாநகராட்சியில் வீட்டு வரியை இதுவரை இருந்து வந்ததை விட பல மடங்கு உயர்த்திய காரணத்தால் ஏழை குடிசைப் பகுதி மற்றும் நடுத்தர மக்கள் ஆகியோர் பெரும் பீதி அடைந்துள்ள நிலை குறித்து, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: துணைத் தலைவர் அவர்களே, போடப்படுகிற இவ்வரி, நிலங்கள், கட்டடங்கள் மற்றும் இவற்றைச் சார்ந்துள்ள பிறபகுதிகளின் வருடாந்திர மதிப்பின் அடிப்படையில் (on the basis of annual value) விதிக்கப்படுகின்றன. இச்சொத்துக்களின் வருட மதிப்பீடு (Annual value) அச்சொத்துக்களின் மூலம் நியாயமாகப் பெறக்கூடிய (Reasonable

1978 ஏப்ரல் 6] [திரு. கா. காளிமுத்து]

letting value) வருட வாடகையைக் கணக்கிட்டு, அதிலிருந்து அச்சொத்துக்களுக்கு அளிக்கப்படும் 10% தேய்மான மதிப்பைக் கழித்துவரும் மதிப்பாகும். இச்சொத்துக்களின் வருட வருமானத் தில் விதிக்கப்படும் சொத்து வரி குறைந்த பட்சம் $15\frac{1}{2}$%ம் அதிகபட்சம் 25% இருக்கும். தனது சொத்தின்மீது போடப் பட்ட வரியின் அளவு அதிகம் என்றும் கருதும் எந்தவொரு நபரும் அதனை எதிர்த்து முறையே மாநகராட்சி ஆணையருக்கோ, மாநகராட்சி வரிவிதிப்பு முறையீட்டுக் குழுவுக்கோ, நீதி மன்றத் திலோ முறையிட்டு பரிகாரம் தேட மாநகராட்சிச் சட்டம் வழி செய்கிறது. ஆயினும் மாநகராட்சியின் வரி உயர்வு குறித்து அதிருப்தி தெரிவித்து பெறப்பட்ட முறையீடுகளின் பேரிலும் சென்னை மாநகராட்சியின் வரி உயர்வு குறித்து திரு. தளவாய் அவர்கள் தொடுத்த வழக்கில் சென்னை உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பினை ஒட்டியும் எந்த அடிப்படையில் உள்ளாட்சி அமைப்பு களால் சொத்துவரி விதிக்கப்பட வேண்டும் என்பது குறித்து அரசு ஆய்ந்து வருகிறது. அதுபற்றி அரசு முடிவு எடுக்க இருக் கிறது.

(முற்பகல் 10-30)

திரு. மு. அரங்கநாதன்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் அளித்த பதில் மாநகராட்சியிலே போடுகின்ற வரிக்கு அப்பீல் செய்கின்ற முறையும். அதற்குப் பின்னால் கமிட்டிக்கு அப்பீல் செய்கின்ற முறையும், அதிலும் திருப்தி அளிக்காவிட்டால் கோர்ட்டுக்குப் போகின்ற உரிமையும் இருப்பதாகச் சொன்னார் கள். அந்த முறைகள் எல்லாம் எனக்குத் தெரியும். ஆனால் முன்பு இருந்ததை விட இப்போது பன்மடங்கு வீடுகளுக்கு வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. அதற்கு குறிப்பாக இரண்டை மட்டும் அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். ஒரே வீதியில் 4 வீடுகள் இருக்கின்றன. முன்னால் அந்த நான்கு வீடு களுக்கும் இருந்த வரி ரூ. 22.10 காசு. ஆனால் இப்போது 22 ரூபாய் 10 காசு வரி இருந்த ஒரு வீட்டுக்கு 108 ரூபாய் 72 காசு வரி. அதே 22 ரூபாய் 10 காசு வரி இருந்த அடுத்த வீட்டுக்கு 32 ரூபாய் 26 காசு. அதே 22 ரூபாய் 10 காசு வரி இருந்த இன்னொரு வீட்டுக்கு 27 ரூபாய் 68 காசு. அதே 22 ரூபாய் 10 காசு வரி இருந்த இன்னொரு வீட்டுக்கு 49 ரூபாய் 76 காசு. இப்படி ஒரே தெருவில் இருந்த 4 வீடுகளுக்கு நான்கு விதமாக வரி விதிக்கப்பட்டிருக்கிறது. அதற்கான குறிப்புகள் அனைத்தையும் இங்கே கொண்டு வந்திருக்கிறேன். அதற்கான காரணங்களை அமைச்சரவர்கள் கவனத்திற்குத் தனியாகத் தெரிவிக்கிறேன். எப்படி இந்த மாதிரி வரி விதிப்பு முறையை அசெஸ் செய் கிறார்கள் என்பது தெரியவில்லை. நானும் 15 ஆண்டுகளாக மாநகராட்சியில் இருந்திருக்கிறேன். ஒரே தெருவிலிருக்கும் ஒரே மாதிரியான 4 வீடுகளுக்கு 4 மாதிரியான வரிவிதிப்பு முறை இருக்கிறது. அதற்குக் காரணம் என்னவென்றால் மாநகராட்சியின்

வரி விதிப்பு விதி 100-ன்கீழ் ஒழுங்கான முறையில் 1973 ஆம் ஆண்டுவரை வரி வசூல் செய்யப்பட்டது; அந்த விதி 100 இப போது கடைபிடிக்கப்படவில்லை. அதனால் பல்வேறு கோளாறுகள் ஏற்பட்டிருக்கின்றன. இன்றைக்கு வரி விதிக்கின்ற அசெஸர் பல் வேறு காரணங்களால் குழப்பத்திற்கு ஆளாகியிருக்கிறார். எந்த அடிப்படையில் நாங்கள் வரி விதிப்பது என்று எங்களையே கேட்கிறார்கள். ஆகவே, அந்த விதி 100 சரியாகக் கடைப்பிடிக்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற பல புகார்கள் அரசுக்கு வந்திருக்கிறன. இந்த புகார் களின் அடிப்படையிலேதான் இதுபற்றி எந்தவிதமான முடிவை எடுப்பது; எந்த அடிப்படையிலே வரி விதிப்பு இருக்க வேண்டும்; எந்த வகையிலே நிர்ணயம் செய்தால் குழப்பம் இல்லாமல் இருக்கும் என்பதை அரசு ஆராய்ந்து வருகிறது. வெகுவிரைவில் அதுபற்றிய குறிப்புகள் வெளிவரும். அதுவரை இப்படிச் சொல் லப்படும் புகார்களுக்கு நிச்சயமாக உரிய நடவடிக்கை மேற் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. அரங்கநாதன்: அதுவரை இப்போது உயர்த்தப் பட்டிருக்கிற வரியை நிறுத்தி வைத்து, முன்னால் இருந்த வரியை வசூல் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அதுபற்றி தெளிவான முடிவு எடுக்கும் வரையில் புகார்களைக் குறிப்பிட்டு கொடுத்தால் அதன்மீது நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஈ) திருவில்லிபுத்தூர் தொகுதியில் எஸ். இராமச்சந்திரா புரத்தில் உள்ள இராமச்சந்திராபுரம் நெசவாளர் கூட்டுறவு உற் பத்திமற்றும் விற்பனைசங்கம் மூடப்பட்டுள்ளதும் தொழிலாளர்கள் வேலையில்லாது இருக்கும் நிலைகுறித்தும்

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே, திருவில்லிபுத்தூர் தொகுதியில் எஸ். இராமசந்திராபுரத்தில் உள்ள க்யூ. 104 இராமச்சந்திராபுரம் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச்சங்கம் மூடப்பட்டுள்ளதால் அங்கு வேலை செய்யும் நூற்றுக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கும் நிலைகுறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் அமைச்சரவர்களின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்.